## மே 3 - உலக பத்திரிகை சுதந்திர தினம்

2018 தீம் – “Keeping Power in Check: Media, justice and the Rule of Law”

- **உலக பத்திரிகை சுதந்திர நாள்** (World Press Freedom Day) என்பது பத்திரிகை சுதந்திரத்தைப் பரப்பும் நோக்கிலும் பேச்சுரிமைக்கான சுதந்திரத்தை உலக நாடுகளின் அரசுகளுக்கு நினைவூட்டவும் ஐக்கிய நாடுகள் அவையினால் சிறப்பு நாளாகப் பிரகடனப்படுத்தப்பட்டது.
- **படித்த இளைஞர்களுக்கு** பயிற்சி அளித்து அவர்களை **முதல் தலைமுறை தொழில் முனைவோராக** உருவாக்கும் நோக்கில் தமிழக அரசு **‘புதிய தொழில் முனைவோர் மற்றும் தொழில் நிறுவனம் மேம்பாட்டுத் திட்டம்’ (NEEDS)** என்ற புதிய திட்டத்தை அறிவித்துள்ளது.
- **இத்தாலியுடன் இந்தியாவிற்கு கலாச்சாரத் தொடர்பு** உருவாகி 70 வருடங்கள் முடிந்துள்ளன.
- இதை நினைவுகூரும் வகையில் டெல்லியின் இத்தாலி தூதரகத்தில் பிரபல ஓவியர் **ஏ.பி.ஸ்ரீதர்** வரைந்த ஓவிய கண்காட்சியை மத்திய அரசின் இந்திய கலாச்சாரத் தொடர்பு கவுன்சில் (ஐசிசிஆர்) மற்றும் இத்தாலி தூதரகத்தின் கலாச்சார மையம் ஆகியவை இணைந்து நடத்தின.
- **பிரதமரின் மருத்துவப் பாதுகாப்பு திட்டம்** 2020 வரை மேலும் 2 ஆண்டுகளுக்கு நீட்டிக்கப்படும். இதற்கு ரூ.14,832 கோடி நிதி ஒதுக்கப்படும்.
- இத்திட்டத்தின் கீழ் நாடு முழுவதிலும் 20 **எய்ம்ஸ் மருத்துவமனைகள் அமைக்கப்படும்.** இதில் 6 மருத்துவமனைகள் ஏற்கெனவே அமைக்கப்பட்டு விட்டன. இதுதவிர 73 **மருத்துவக் கல்லூரிகள் மேம்படுத்தப்படும்.**
- ஓய்வூதியதாரர்கள் உமாங் செயலி மூலம் “**ஓய்வூதிய கணக்கு புத்தகத்தைக் காட்டுக**” எனும் சேவையை **ஈ.பி.எஃப்.ஓ.** அறிமுகம் செய்துள்ளது.
- “பெண் குழந்தையைக் காப்போம், பெண்குழந்தைக்கு கற்பிப்போம்” (**Beti Bachao Beti Padhao**) என்ற திட்டம் 244 மாவட்டங்களில் செயல்படுத்துவது தொடர்பாக தேசிய மாநாட்டை மத்திய மகளிர் நலம் மற்றும் குழந்தைகள் மேம்பாட்டு அமைச்சகம் புதுதில்லியில் நாளை (2018, மே 4) நடத்துகிறது.
- **நேபாளத்தின்** தலைநகரான காத்மாண்டுவில் இருந்து சுமார் 500 கிமீ தொலைவில் உள்ளது தும்லிங்டார் பகுதி. இங்குள்ள **காண்ட்பரி** 9

என்ற இடத்தில் **இந்திய அரசின் உதவியுடன் 900 மெகாவாட் மின்சாரம்** உற்பத்தி செய்யும் **நீர்மின் திட்டம்** செயல்பட உள்ளது.

- **நேபாள பிரதமர் - சர்மா ஒலி**
- பாரம்பரிய சின்னங்களை பராமரிக்கும் திட்டத்தின் கீழ் **டெல்லி செங்கோட்டையை பராமரிக்கும்** பொறுப்பு **தி டால்மியா பாரத் குரூப்பிடம்** மத்திய அரசு ஒப்படைத்துள்ளது.
- மோடி, ஜின்பிங் பேச்சைத் தொடர்ந்து **இந்திய சீன ராணுவங்கள் இடையே** தகவல் பரிமாற்றத்துக்காக நேரடி தொலைபேசி **(ஹாட்லைன்) சேவை** உருவாக்கப்படும் என அறிவிக்கப்பட்டு உள்ளது.
- புகழ்பெற்ற எழுத்தாளர் கவிஞர் **ரவீந்திரநாத் தாகூரின் 155வது பிறந்த நாளை** முன்னிட்டு **எகிப்து** தலைநகரான **கெய்ரோவில்** 5 நாள் கலாச்சார திருவிழா நடைபெற உள்ளது.
- இவர் **1913ஆம்** ஆண்டு மிக உயர்ந்த விருதான **நோபல் பரிசை** பெற்றவர்.
- இந்திய காப்பீட்டு ஒழுங்குமுறை ஆணையத்தின் **(ஐஆர்டிஏஐ)** தலைவராக **சுபாஷ் சந்திர குந்த்யா** நியமனம் செய்யப்பட்டிருக்கிறார்.
- எல்ஐசி தலைவர் - **வி.கே.சர்மா**
- நியு இந்தியா அஸ்யூரன்ஸ் தலைவர் - **ஜி.ஸ்ரீனிவாசன்**
- **2022-ம் ஆண்டுக்குள்** 50 எம்பிபிஎஸ் வேகத்திலான **5ஜி பிராட்பேண்ட்** சேவை அனைவருக்கும் கிடைக்க வழிவகை செய்தல், 40 லட்சம் புதிய வேலைவாய்ப்புகளை உருவாக்குதல் போன்றவை இந்த வரைவின் நோக்கமாக உள்ளது.
- மிகப்பெரிய இரு சக்கர வாகன நிறுவனமான **ஹீரோமோட்டோ கார்ப்பின்** மார்ச் காலாண்டு **நிகர லாபம் 34.78%** உயர்ந்து ரூ.967.40 கோடியாக உயர்ந்திருக்கிறது.
- இந்தியாவின் முன்னணி **பேட்மிண்டன்** வீரரான **பிரனோய்** முதன்முறையாக உலகத் தரவரிசையில் **8-வது** இடத்தை பிடித்துள்ளார்.
- மற்றொரு முன்னணி வீரரான **ஸ்ரீகாந்த் கிதாம்பி 5-வது** இடத்தில் இருந்து **3-வது இடத்திற்கு முன்னேறியுள்ளார்**.

- **ஆஸ்திரேலியா ஆண்கள் கிரிக்கெட்** அணியின் தலைமை **பயிற்சியாளராக** முன்னாள் கிரிக்கெட் வீரர் **ஜஸ்டின் லேங்கர்** நியமிக்கப்பட்டுள்ளார்.
- 5 ஆண்டுகளுக்கு பிறகு **ஐசிசி** கிரிக்கெட் தரவரிசையில் **இங்கிலாந்து முதலிடத்துக்கு** முன்னேற்றம் கண்டுள்ளது.
- முதலிடத்தில் இருந்த **இந்திய அணி** 122 புள்ளிகளுடன் **2-வது** இடத்துக்கு தள்ளப்பட்டுள்ளது.